# கொப்பேகடுவ பலியானதற்கு புலிகளே பொறுப்பு

## - லோறன்ஸ் திலகர்

(கொழும்பு)

லெப்டினன் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ பலியான தற்கு விடுதலைப்புலிகளே பொறுப்பு என விடுதலைப்புலி

(4-ம பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 20 இதழ் 298

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 05 — 12 — 1992

## 'பிரபா' வின் படம் ரூபவாஹினியில்

(கொழும்பு)

அராலித்துறையில் கடந்த ஆகஸ்ட்மாதம் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் லெப். ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவும் மற்ற இராணுவ அதிகாரிகளும் கொலைப்

(4-ம் பக்கம் பார்க்க)

## வட பிராந்தியத்திற்கு புதிய கடற்படைத் தளபதி

(கொழும்பு)

வடபிராந்திய கடற்படைத் தளபதியாக கொமடோர் தயா சந்திரசிறி நியமிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் இதற்கு முன்னர் கடற்படைத் தலைமையகத்தில் செயற்பாட்டுப் பணிப்

(4ம் பக்கம் பார்க்க)

### சக்தி மிக்க வானொலிக்கருவிகள் மூலம்

# ராணுவத்தின் ரகசிய தகவல்களை வெளியார் ஒற்றுக்கேட்கின்றனர்!

## தடுப்பு முயற்சியில் அரசு இறங்கிவிட்டது!!

(கொழும்பு)

அதிசக்தி வாய்ந்த வானொலிக் கருவிகள்மூலம் இராணுவத்தின் இரகசியத்தகவல்களை பொதுமக்களில் பலர் ஒற்றுக்கேட்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் இராணுவத்தின் இரகசிய பாதுகாப்பு நடவடிக்கைகளும், தாக்குதல் நடவடிக்கைகளும் வெளியாருக்குத் தெரியவந்திருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதனைத் தடுப்பதற்கு அரசு தற்போது புதிய சடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

இராணுவ இரகசியத்தகவல்களைவிட அதிசக்திவாய்ந்த களைப் பாதுகாக்கும் விதமாக வானொலிக் கருவிகளை சாதாரண வானொலிக்கருவிகளை சட்டத்துக்குப் புறம்பாக பொதுமக்கள் பாவிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக தடை விதித்துள்ளது.

அரசாங்கத்தின் உத்தரவுக்கு மாறாக அதிசக்திமிக்க வானொலிக்கருவிகளை சட்டவிரோதமாகப் பாவிப்போருக்கு ஒரு லட்ச ரூபா அபராதமும் இரண்டு வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. (இ)

## ஜே. ஆரை சி. ஐ. டி. பின்தொடர்கிறது

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை சி. ஐ. டி. பொலிசார் பின் தொடர்ந்து வருவதாக சிங்களப்பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

முன்னாள் பிரதிபொலிஸ்மா அதிபர் பி உடுகம் பொலவைத் தேடி, அண்மையில் வியாங்கொடையில் கும்புல்ஒருவே என்னுமிடத்தில் ஜெயவர்த்தனவின் வீட்டிலும், வளவிலும் சி. ஐ. டி. பொலிசார் திடீர் சோதனை நடத்தியுள்ளனராம்.

[4 ம் பக்கம் பார்க்க]

## வலிகாமம் பகுதிக்கு தபால்களை எடுத்து செல்ல சர்வ. செஞ். சங்கம் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள மாதகல், இளவாலை, பன்னாலை, தெல்லிப்பழை, கொல்லங்கலட்டி ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கான சாதாரண கடிதங்களை மாதத்தில் இருமுறை எடுத்துச்செல்ல சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பகுதிகளில் வசிக்கும் மக்களுடன் கடிதத்

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தற்கொலைப் படைப்பிரிவு கேகாலை மாவட்டத்துக்குள் ஊடுருவியுள்ளது!

(கொழும்பு)

இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைபிரிவின் ஒரு பகுதி கேகாலை மாவட்டத்துக்குள் புகுந்துள்ளதாக தமக்கு இரசியத் தகவல் கிடைத்துள்ளதாக சப்பிரகமுவா மாகாணத்தின் பிரதி பொலிஸ்மா அதிபர் திரு. லயனல் விஜயசேகரா தெரிவித்துள்ளார்.

இதனால் பொலிஸாரும் இராணுவத்தினரும் கேகாலை மாவட்டத்தில் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடும் புதியவர்கள் பற்றி பொலிஸாருக்கு உடன் தகவல் கொடுக்கும்படி பொலிஸார் பொதுமக்களைக் கேட்டுள்ளனர். (வி)

## றெனியின் வழக்குகளை அரசு வாபஸ் பெற்றது!

(கொழும்பு)

முன்னாள் நிதியமைச்சர் றெனி டி மெல்லுக்கு எதிராக அரசாங்கம் தொடுத்திருந்த அனைத்து வழக்குகளையும் அரசு நேற்று வாபஸ் பெற்றது.

நிதிமோசடி சம்பந்தமாக

(4-ம் பக்கம் பார்க்க)

## 14-ம் திகதி நாடுதிரும்புகிறார்?

(கொழும்பு)

முன்னாள் நிதியமைச்சர்

(4-ம் பக்கம் பார்க்க)

### வெடிகுண்டுகளை கண்டுபிடிக்க

## பத்து மோப்ப நாய்கள் அவுஸ்திரேலியாவிலிருந்து தருவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் வெடிகுண்டுகளை கண்டுபிடிக்கும் பொருட்டு ஆஸ்திரேலியாவிலிருந்து பத்து மோப்ப நாய்கள் அவசரமாக கொழும்பிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

கொழும்பில் மேலும் பல குண்டுத்தாக்குதல்கள் இடம்பெறலாமென புலனாய்வு பிரிவினர் எச்சரித்ததையடுத்தே விமானம் மூலம் இவை கொழும்பிற்கு கொண்டுவரப்

4-ம் பக்கம் பார்க்க)

## படையினர் - டாங்கிகள் பெருமளவு குவிப்பு!

(மட்டுநகர்)

மட்டக்களப்பு காத்தான்குடி எல்லைப் பகுதிகளில் பெருமளவு இராணுவத்தினரும், ஆயுதங்களும் டாங்கிகளும் குவிக்கப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் இப்பகுதிகளில் நிகழக்கூடும் என்றஅச்சத்தினால்இராணுவம் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ததுடன் மேற்படி எல்லைப்பகுதிகளில் இருந்த முஸ்லிம்களையும் இராணுவம் அப்புறப்படுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது. (வி)

### 10,000 அடையாள அட்டைகள்

## இன்று முதல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அஞ்சல் அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்காக பத்தாயிரம் வெற்று அட்டைகள் நேற்றுக் காலை தரை மூலமாக எடுத்துவரப்பட்டுள்ளன. இதனையடுத்து பிரதி அஞ்சல் மா அதிபரின் எல்லா நிர்வாக காரியாலயங்களும் தமது சகல வேலைகளையும் இடைநிறுத்தி அடையாள அட்டைகள் விநியோகத்தில் துரிதமாக ஈடுபட்டுள்ளன.

எண்ணாயிரத்து ஐந்நூறுக்

(4ம் பக்கம் பார்க்க)

## 5ம் ஆண்டு புலமைப் பரிசில் முடிவுகள் வெளிவந்தன

(திருநெல்வேலி)

ஐந்தாம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்று மாலை வெளியிடப்பட்டது.

நேற்று வெளியாகிய பரீட்சை முடிவுகளின்படி இலங்கையிலேயே தமிழ்மொழி மூலம் அதிக புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவர் யாழ் புனித பொஸ்கோ

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### திருவிளக்குப் பூஜை

தத்துவமும் வழிபாடும் என்ற கைநூல் விற்பனைக்குண்டு. ரூபா 20-00. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-7019)

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU KOLA Capsules. கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6970)

### சித்திரம்

வெளிவந்துவிட்டது சித்திரம். ஆண்டு 11க்குரிய விளக்கப் படங்கள். அலங்காரங்களும், விளக்கப்படங்களும் தொகுதி I, 6-ம் ஆண்டு தொடக்கம் அனைத்து வகுப்புக்களிலும் பாவிக்கலாம். தயாரிப்பு: யசோ, வெளியீடு: நடுவுத்துருத்தி. (சி-7023)

### சனி நீராடு

கிரமமாக எண்ணெய் ஸ்நானம் சுகவாழ்வுக்கு அவசியம் எண்ணெய் ஸ்நானத்திற்கு முந்தையோர் வழியில் அரப்பு, எலுமிச்சங் கோது, பயறு, வெந்தயம் மற்றும் மருந்துச் சரக்குகள் கொண்டு தயாரிக்கப்பட்டது. ஒலிவ் ஸ்நானப் பவுடர். அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனை ஆகின்றது—மில்க்வைற். (சி-2641)

### அதிஷ்டம் அழைக்கிறது

விவாகத் தடை, கல்வித் தடை போன்ற எத்தகைய கஷ்டங்களும் நீங்க சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். புதிய இடமாற்றம் ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 158 கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி-7021)

### புதிய வகுப்புக்கள்

[கல்வியாண்டு - 1993]

1993 கல்வியாண்டிற்கான ஆண்டு4 தொடக்கம் ஆண்டு11 வரையான புதிய வகுப்புக்கள் 05-12-92 சனி பி. ப. 3-00 மணிக்கு ஆரம்பமாகின்றன. சகல பாடங்களும் கற்பிக்கப்படும். யாழ். முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை. பயிற்சிப்பரீட்சைகள் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குச் சிறந்த நிறுவனம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [ஏ-2642]

### புதுக் கவிதைகள்

நூலாக வெளியிடுவதற்குப் புதுக் கவிதைகள் வரவேற்கப்படுகின்றன. தமிழமுது, 45, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (ஏ-2644)

### வாழைநார்ப் பயிற்சி

2-12-92 முதல் ஆரம்பமாகியுள்ளது. விபரங்கட்கு:- யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம், 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (ஏ-2645)

### வெளிவந்துவிட்டது

பொது அறிவுக்கான விடைகள், அருள் மொழிகள், செய்வீகக் கருத்துக்கள், திருக்குறள் மணிகளுடன் அஷ்டலக்ஷ்மி தினத்தாள் கலண்டர் 1993. வெளிவந்துவிட்டது. வாங்க முந்துங்கள். (சி-70_9)

## மீனவர் மீது கலிபர் தாக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். கடலேரிப் பகுதியில் நேற்றுக்காலை மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி கல்முனை- பூநகர் இராணுவ முகாமிலிருந்து 50 கலிபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அரியாலை கிழக்கு பந்தலடிப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கியே படையினர் 15 நிமிடம் வரையில் தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (56)

NEW MATHS ACADEMY
ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்
93 O/L
MATHS
சங்கர்
சனி & ஞாயிறு 6-7 A. M
சனி & ஞாயிறு 2-6 P. M
★ கணிதம் - Dக்கு உத்தரவாதம்
ஆண்டு
10, 9, 8, 7, 6, 5
ஆரம்பம்
6-12-92 ஞாயிறு
(ஏ-2646)

சன்மார்க்கசபை - குரும்பசிட்டி
இரசிகமணி, இலக்கியச் செல்வர் கனக செந்திநாதன்
15-வது நினைவு தினம்
இடம்: கம்பன் கோட்டம், நல்லூர்
காலம்: 06-12-1992 ஞாயிறு காலை 9 00 மணி
தலைவர்: கலாகேசரி ஆ. தம்பித்துரை
நினைவுப் பேருரை
மரபின் முன்னிலையில் இரசிகமணி
கவிஞர் இ. முருகையன் அவர்கள்
கருத்தரங்கு
இன்றைய சூழ்நிலையில் - மக்கள் நலன் - அறிவியல் படைப்பாளிகள்.
ஏ. ரி. பொன்னுத்துரை,
வைத்தியகலாநிதி, எம். கே. முருகானந்தன்
ஐ. சாந்தன், செம்பியன் செல்வன்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
க. விஸ்வநாதன்
பிரசாரசெயலாளர்
(சி- 7027)

## நாவலர் விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூஜை இன்றுசனிக்கிழமை இணுவில் மஞ்சத்தடி விவேகானந்தா கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் திரு. மா. ஆனந்தர் தலைமையில் நடைபெறும். திரு. பெ. கனகசபாபதியின் வரவேற்புரையை அடுத்து ஆறுமுகநாவலர் பேச்சுப்போட்டியில் பங்கு கொண்டு 1-ம், 2-ம், 3-ம் இடத்தைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி இந்து மாணவர் மன்றத்தினரால் நடாத்தப்படும் நாவலர் விழா இன்று சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு கல்லூரி அதிபர் நா. க. சண்முகநாத பிள்ளை தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

## இராசி பலன்

05-12-1992

(தமிழுக்கு கார்த்திகை 20)

சனிக்கிழமை

ஏகாதசி வைகறை 5-30 வரை: ரேவதி பி. இ. 1-15 வரை. ஏகாதசி விரதம். இராகு காலம் காலை 9-17 முதல் 10-47 வரை சுபநேரம் மாலை 3-17 முதல் 4-47 வரை

**மேடம்:** தெளிவற்ற நிலை, மனச் சங்கடம், அலைச்சல்.

**இடபம்:** தொழில் மேன்மை மாமியார் சகாயம், பண வரவு.

**மிதுனம்:** தனசிந்தை குடும்ப சுகம், காரிய டலிதம்.

**கடகம்:** தொழில் கஷ்டம், மனவேதனை, குடும்பப் பொறுப்பு.

**சிங்கம்:** வீண்பகை, தனிமைப்படல், அதிகாரிகள் சினம்.

**கன்னி:** பகைவர் வெற்றி, குடும்ப மகிழ்ச்சி, தெய்வ ஞானம்.

**துலாம்:** சுபகாரியம், வெளியுலகச் செய்தி, விருந்தினர் வருகை.

**விருச்சிகம்:** ஏமாற்றம், மனைவியால் துன்பம், யோசனை

**தனுசு:-** வழித்தடங்கல் இனசனவிரோதம் விரக்தி

**மகரம்:-** நினைத்தது கைகூடல், கல்வியால் பெருமை, சகோதர உதவி.

**கும்பம்:-** தொழில் தகராறு, வெறுப்படைதல், பண முடை,

**மீனம்:-** பயண அனுகூலம், உறவினர் மகிழ்ச்சி, புதிய முதலீடு.

— ஜோஸ்யர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
விஞ்ஞானபீடம்
1991/92 கல்வியாண்டிற்கான வகுப்புகள் 1992 - 12 - 07ம் திகதி ஆரம்பமாகவுள்ளதால், விஞ்ஞானபீட மாணவர்கள் அனைவரும் அன்றே சமூகமளிக்கவும். வகுப்புக்கள் தொடங்கிய மூன்று வாரங்களுக்குள் சமுகமளிக்காவிடின், கல்வியைத் தொடர அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்.
பதிவாளர்.
(ஏ 2647)

### வடமராட்சி, தென்மராட்சியில்
### வன்செயலால் பாதிப்பானவருக்கு
## நிவாரணம் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்ட வன்செயல்காரணமாக ஊனமடைந்து பாதிப்புக்குள்ளாகி இதுவரை நிவாரணம் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு நிவாரணம் வழங்குகின்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக செயலகத்தின் உயர் அதிகாரிகளை உள்ளடக்கிய குழு தனது இரண்டாவது விஜயத்தை 9ம் திகதியிலும் 3வது விஜயத்தை 12ம் திகதியிலும் மேற்கொள்ள விருக்கின்றது.

09ம் தேதி புதன்கிழமை காலை 9-00மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலாளர் பணிமனையிலும் வடமராட்சி மக்களுக்காக 12ம் தேதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலாளர் பணிமனையிலும் இக்கொடுப்பனவுகளுக்கான கடமைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

பாதிப்பானவர்கள் விண்ணப்பப்படிவத்தின் பற்றுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை வங்கிக் கணக்குப் புத்தகம் குடும்பப் பதிவு அட்டை (பொலித்தீன் உறையில் இடப்பட்டது) ரூபா2 /- பெறுமதியான முத்திரை ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும். (16)

## 6 மாதமாக சம்பளம் இல்லை

[அரியாலை]

வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் கீழ் கடமையாற்றிய ஊழியர்கள் சிலருக்கு இன்னமும் ஆறுமாதச்சம்பளம் வழங்கப்படவில்லையென்று கூறப்படுகிறது. (59)

## திருக்கார்த்திகை தீபத்திருநாள்

(அரியாலை)

இந்துக்களின் முக்கிய பண்டிகையான திருக்கார்த்திகைத் தீபத் திருநாள் எதிர்வரும் 9-ந் திகதி புதன்கிழமை பௌர்ணமி தினத்தன்று சகல இந்து ஆலயங்களிலும் இந்து மக்கள் இல்லங்களிலும் தீபங்கள் ஏற்றிக் கொண்டாடப்படவுள்ளது.

## புதிய உதவி அ. அதிபர்

(மானிப்பாய்)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபராக நா. வேதநாயகன் இம்மாதம் முதல் நியமனம் பெற்றுள்ளார்.

சாவகச்சேரி மேலதிக உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றிய இவர் அதற்கு முன்னர் நெடுந்தீவு உதவி அரச அதிபராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (71)

## றெட்பானா பிரதிநிதி வருகை

(யாழ்ப்பாணம்)

றெட்பானா கொழும்பு வதிவிடப் பிரதிநிதியொருவர் நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்துக்கு விஜயம் செய்தார்.

யாழ். மாவட்ட தற்போதைய நிலவரங்கள் பற்றி அரசாங்க அதிபருடன் அவர் கேட்டறிந்து கொண்டார் என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. [சு]

## குமாரி வருகிறது

(திருநெல்வேலி)

குமாரிக் கப்பல் யாழ். குடாநாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்களையும் ஏற்றிக் கொண்டு கொழும்பிலிருந்து புறப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்பட்டது

இதேவேளை இங்கு தரித்து நிற்கும் குமண கப்பல் செல்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் 5-ம் திகதிக்குப் பின்னரே குமண புறப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (157)

## பொதுமகனும் பலியாம்

(கொழும்பு)

வலைப்பாய் - இடைக்காடு பகுதியில் இடம்பெற்ற மோதலில் தமிழ் பொதுமகன் ஒருவரும் கொல்லப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இடைக்காடு முகாமிலுள்ள படையினருக்கான சமையல் வேலையில் ஈடுபடும் பொதுமகனே இத் தாக்குதலில் கொல்லப்பட்டார் இத் தாக்குதலில் 56 படையினர் உயிரிழந்ததும் தெரிந்ததே. (சி)

## இன்று

(நல்லூர்)

சுகநல வேலைத்திட்டங்களை சமூக மட்டத்தில் சிறப்பாக செயற்படுத்துவதற்கு கிராம சேவை உத்தியோகத்தர்களது ஈடுபாட்டினை உருவாக்கும் நோக்குடன் யாழ். மாநகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் கடமைபுரியும் கிராமசேவை அலுவலர்களுக்கான சுகாதார கருத்தரங்கு இன்று சனிக்கிழமை நடைபெறும்.

இக்கருத்தரங்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். இக்கருத்தரங்கிற்கு யாழ் மாநகராட்சி மன்ற ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தலைமைதாங்குவார். (158)

தீவக

## மீனவருக்கு 100 வள்ளங்கள்

(கொழும்பு)

யாழ். தீவுப்பகுதி மீனவர்களுக்கு 100 மீன்பிடி வள்ளங்கள் வழங்கப்படவுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் துறை அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா கடற்படை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை மீனவர்களுக்கு லைசென்ஸ் வழங்கும் முறை விரைவில் அமுலுக்கு வரும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## இரு சைக்கிள்கள் திருட்டு

(பண்டத்தரிப்பு)

வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வந்த இருநோயாளர்களின் சைக்கிள்கள் இரண்டு, கடந்த வாரம் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை நிர்வாகம் மானிப்பாயில் நடாத்தி வரும் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் திருடப்பட்டுள்ளது. (72)

## பரீட்சை

(கொழும்பு)

ஆண்டு ஒன்பதில் கல்விகற்கும் மாணவர்களுக்கான தொழில்நுட்பவியல் சான்றுப் பத்திரப் பரீட்சை எதிர்வரும் 17ம் திகதி நடைபெறவுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இம்மாதம் 14ம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

சுமார் மூன்று லட்சம் மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளது குறிப்பிடத்தக்கது. (கே)

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை விழா

## ★ சிறப்பிதழ் - (5-12-1992) ★

### ( யாழ். மத்திய கல்லூரி இந்து மாமன்றம் )



ஆறுமுகநாவலர் அவர்கள் பிறந்தது 18-12 1822. இறந்தது 21-11-1879 அவர் பிறந்து இவ்வாண்டுவரை 170 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன இறந்து 113 ஆண்டுகளாகின்றன. அவர் வாழ்ந்தது 57 ஆண்டுகள் மட்டுமே ஆனாலும் இந்த வையம் உள்ளவரை வாழும் பணிகளை அவர் ஆற்றிச் சென்றிருக்கிறார்.

யாழ்ப்பாணத்து நல்லூர், இன்றுவரை பலவரலாற்று நிகழ்வுகளுக்கு நிலைக்களமாக நிமிர்ந்து நிற்கிறது. இந்த நல்லூரிலே பிறந்தவர் நாவலர் அவருடைய பிறப்பு ஒரு வரலாற்றுத் தேவையாக இருந்ததென்பதே எனது கணிப்பு, அவர் தோன்றியிருக்காவிடில் எமது வரலாறு திசை மாறியிருக்குமென்பதை ஆறஅமர இருந்து ஆழ்ந்து சிந்தித்தால்புரியும்.

இருவரினதும் சமய விழுமியங்களைப் பாதிக்கவில்லை. "கல்வியா சமயமா முக்கியம்" என்று பார்சிவல் பாதிரியாரை அவர்களைப் பிரித்தானிய அரசாங்கம் கேட்டபோது, பாதிரியார் 'கல்வியே' என்று

அவர்கள் "நாவலர் வழிவரும் இலக்கிய மரபு பற்றிக் கூறும் போது "நாவலர் மரபு என ஒன்று இருப்பதன் உண்மையையும், அது தொடர்ந்து இந்நாட்டில் இயங்கி வந்துள்ளது என்பதையும் அதற்குச் சில சிறப்பியல்புகள் உண்டு என்பதனையும், வெளித்தோற்றத்தில் சிற்சில மாற்றங்கள் ஏதன்படினும் அம்மரபு இன்றைக்கும் வாய்ப்பாயுள்ள சில ஆக்கக் கூறுகளைக் கொண்டிருக்கிறது என்பதையும், அவற்றில் ஒருமுகப்படுத்திய இலக்கிய நோக்கு, மக்கட் சார்பு, நாட்டு நலநாட்டம், என்பன சிறப்பானவை என்பதையும் அவை மறைமுகமாகவேனும் உள்ளார்ந்த சக்தியுடன் தொழிற்படுவதனாலேயே, தற்கால ஈழத்துத் தமிழிலக்கியம் சிற்சில அம்சங்களில் தென்னிந்திய இலக்கியப்

## நாவலரின் நினைப்பும் முனைப்பும்

எங்களுடைய ஒழுக்கம் அன்று சைவ ஒழுக்கமாகவே இருந்தது. அது எங்கள் கலை பண்பாடுகளோடு பின்னிப் பிணைந்திருந்தது. பிற ஒழுக்கங்கள் வந்து புகுதலும் "புதியன கண்டபோது விடுவாரோ புதுமை பார்ப்போர்" என்று மக்களின் ஒரு கூட்டத்தினர் விட்டில்களைப்போல் விழுந்து எங்கள் பண்பையும் அதனைப் பெற்ற பயனையும் சிதறடிக்க முனைந்ததையும்—அவர் ஏற்கவில்லை. இறுமை கண்டு பொங்கினார். அது அன்று தேவைப்பட்ட எங்கள் தேசியத்தின் ஒரு எழுச்சியேயாகும்.

நாவலர் அவர்கள்; நன்மாணவனாகவும், நல்லாசிரியனாகவும் யாழ் மத்திய கல்லூரியில் பெற்ற கிறிஸ்தவ சூழலின் எழுச்சிமிகு அறிவுச் சுரப்பே அவரை தேசிய வீரனாக்கியது. மத்திய கல்லூரியின் அப்போதைய அதிபர் பார்சிவல் பாதிரியாருக்கும் இவருக்குமிருந்த நெருங்கிய அன்பு செழுமிய நட்புறவு

அறைந்துரைத்தார். அதனால் வெஸ்லியன் திருச்சபை அவருடைய சேவையை நிறுத்தியது. ஆனாலும் நாவலர், 'பார்சிவல் நட்பு நீடித்தது. விவிலிய நூலை தமிழில் ஆக்கித் தந்த தன்மையொன்றே, நாவலர் சமயச் காழ்ப்புணர்வு அற்றவர் என்பதற்குச் சான்றாகும்

நாவலர் நாவன்மை படைத்தவர், கல்விச்சாலைகளை நிறுவியவர், அச்சுக்கூடத்தை நிறுவி பழம்பெரும் நூல்களை அச்சேற்றியவர். இவரின் உரைநடை, தலைசிறந்தது. மாணவர்களுக்காக எழுதிய பால பாடங்கள் மிகச் சிறந்தவை. யாழ்ப்பாணத்தமிழே செந்தமிழ் என்பதனை தமிழறிந்த நல்லுலகெங்கும் நிலைநாட்டியவர் நாவலர். பேராசிரியர் க. கைலாசபதி

போக்கிலிருந்து வேறுபட்டு விளங்குகிறது என்பதையும் நாம் ஐயத்திற்கிடமின்றி உணரக்கூடியதாயிருக்கிறது' என்று கூறியுள்ளார்.

சிவநெறியும்/அல்லது அன்றைய எங்கள் பயன்பாட்டு நெறியும்; செந்தமிழும் செறிந்த ஒரு சிறப்பு இந்த மண்ணில் செழித்தோங்க வேண்டுமென்ற நினைப்போடும் முனைப்போடும் செயலாற்றினார் நாவலர். இந்த முனைப்பு சமூகத்தில் உள்ள சிலரின் நினைப்புகளைப் பாதிக்கத்தான் செய்தது.

"அவ்வாறு அறியார்
அறிகின்றதலால்
எவ்வாறு ஒருவர்க்
கிசைவிப்பதுவே"

—கந்தர் அநுபூதி

நா. க. சண்முகநாதபிள்ளை
அதிபர், யாழ். மத்திய கல்லூரி.
( காப்பாளர், இந்து மாமன்றம் )

## யாழ். மத்திய கல்லூரியும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும்

### (1982 — 1879)

- க. சி. குலரத்தினம் -

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் இருபத்தொரு ஆண்டுகளையும், இறுதி இருபதிதொரு ஆண்டுகளையும் நீங்கிய பின், எஞ்சிய ஐம்பத்தெட்டு ஆண்டுகள் நாவலர் வாழ்ந்த காலமாகும். அவர் புகழொடு தோன்றியவர். அவர் தந்தையார் கந்தர் என்னும் கந்தப்பிள்ளை. கந்தப்பிள்ளையின் முன்னோரை ஒல்லாந்தர் காலம் முதலாகக் கூறலாம். மூத்ததம்பி முதலியார் சோதிநாதர் இலங்கையர் பரமானந்தர். நாவலரின் தாயார் இவகாமி. சிவகாமி வேதவனத்தார் மகள். வேதவனத்தாரின் முன்னோர் திருநெல்வேலியினர். அவர்களைப் போர்த்துக்கேயர் காலம் முதலாகக் கூறலாம். காராளபிள்ளை என்பாரின் மகனே ஞானப்பிரகாசத் தம்பிரான். பறங்கிய அரசாங்க அதிபருக்குப் பசுமாடு கொடுக்க மறுத்துப் பாரத தேசம் சென்று வடமொழி பயின்று பல நூல்கள் செய்தவர் அவர்.

நாவலர் குடும்பத்திற் கடைக்குட்டி. அவருக்குத் தியாகர், சின்னத்தம்பி, பூதத்தம்பி, பரமானந்தர், தம்பு என

அண்ணன்மார் ஐவர் இருந்தனர். அவருககு அக்கைமாரும் பலர் இருந்தார்கள். எல்லோரும் படிப்பாளிகள்.

நொத்தாரிசு, உடையார், வைத்தியர், உத்தியோகத்தர் என இருந்தனர். பரமானந்தர் பெரிய புலவர். அவர் பாடல்கள் பல கிடைத்துள்ளன. அவர் நல்லூர்க் கந்தன்

மீது பல பிரபந்தங்கள் பாடியுள்ளார், கந்தர் ஆங்கிலம், ஒல்லாந்தம், வடமொழி முதலாய பன்மொழிகள் அறிந்த கச்சேரி உத்தியோகத்தர். இருபத்தொரு நாடகங்கள் எழுதிய தமிழறிஞர். கடைக்குட்டி ஆறுமுகம் செல்லப்பிள்ளையாயினும், படிப்பிலே கவனமுள்ளவர். சம்பந்தப் புலவர், சரவணமுத்துப் புல

[4ம் பக்கம் பார்க்க]

## சைவத்திற்கும், தமிழுக்கும் வாழ்நாளை அர்ப்பணித்தார்

"நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே-எல்லவரும்
ஏத்து புராணங்களெங்கே
ஸ்கேப்ர சங்மெங்கே
யாத்தனறி வெங்கே
யறை"

மேற்கூறிய பொன்மொழிகளில் அறிவிற் சிறந்த பெரியார் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களின் சேவையை மிக அழகாகவும்,

சுருக்கமாகவும் போற்றினார். ஆங்கிலேய அரசினரின் ஆதிக்க ஆதரவோடு பாதிரி

4-ம் பக்கம் பார்க்க)

வே. ஐயாத்துரை
உப அதிபர்
(யாழ். மத்திய கல்லூரி)

## மலர் வெளிவர வாழ்த்துபவர்கள்

L.E.O. CLUB (யாழ். மத்திய கல்லூரி)
இன்ரரக்ட் கழகம் (யாழ். ம. கல்லூரி)
சென் ஜோன்ஸ் முதலுதவி பிரிவு (யாழ். ம. கல்லூரி)
தமிழ் மன்றம் (யாழ். ம. கல்லூரி)
வணிக மன்றம் ,, ,,
கூட்டுறவுச்சங்கம் ,, ,,
ஆசிரியர் வட்டம் - ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
சாரணியக் குழு
K L. ஸ்ரீதரன்
தயா அச்சகம்
சித்தி பாதணியகம்
"A" LEVEL CENTRE
து. ரமேஸ்குமார்
சிங்கம் பாமஸி
ROYAL DISPNSRY
பரணி மருந்துச்சாலை
செல்லப்பா களஞ்சியம்
அன்னராஜா ஸ்ரோர்ஸ்
ஆர். ஜீ. ஸ்ரோர்ஸ்
S. M FERNANDO
ERIC. GANESH
க. செ. கைலாசபிள்ளை
விக்னேஸ் ரெக்ஸ்
அண்ணா தொழிலகம் இணுவில்
நியூ சயன்ஸ் சென்ரர்
அருள் கல்வி நிலையம் இணுவில்
வீனஸ் ரேடர்ஸ்
ரட்ணம் பார்மஸி
கே. கே. ஏ. கந்தையாபிள்ளை
வசந்தா பார்மஸி
ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ்
கதிரவன்
ஆனந்தன் மோட்டோர்ஸ்
வே. கந்தையாப்பிள்ளை
யசோ பான்ஸி கவுஸ்
விக்னேஸ்வரா ரெக்ஸ்ரைல்
நியூ புவனேஸ்வரிமெடிக்கல்ஸ்ரோர்ஸ்
பொ. கேதீஸ்நாதன்
நா. பேரின்பநாயகம்

## நன்றி

எதிர்காலத் தமிழினத்தினதும். சைவ நெறியினதும் நன்மை கருதி, நாவலர் பெருமான் சித்தித்துச் சிந்தித்து. பெருமுழக்கிட்டு, எடுத்து இடித்துச் சொல்லிச் செயலாற்றி எத்தனைத் தியாகம் செய்தார். இன்றுவது விழிப்புணர்ச்சி பெற்றுள்ளமை எமக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிக்கின்றது. நாம் உய்யும் வகையில் காட்டிய உயரிய வழிகள் பற்பல.

இந்த வகையிலே எமது இந்து மாணவர் மன்றம் நாவலர்பெருமானுக்கு முதற்கண் அஞ்சலியையும், நன்றியையும் செலுத்தும்வகையில் இவ்விழாவை நடத்துகின்றது. இந்நிகழ்வானது, யாழ்.மத்தியகல்லூரியின் பொன்னெழுத்துக்களினால் பொறிக்கத் தக்கது எதிர்கால மக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதுமாகிய இவ்விழா நிகழ்ச்சித் தொடர்பில், நாவலர் பெருமானது பெருமையையும், நற்பணிகளையும், அவர் நல்லுபதேசங்களையும் நினைவுகூரச் செய்யும் ஒரு சிறப்பிதழை வெளியிடத் துணிந்தோம். இம்மலர் சிறப்புற வெளிவர உதவிய எல்லோருக்கும் எமது நன்றி.

ஞான. திருக்கேதீஸ்வரன்,
சோ. பேரின்பநாதன்.
(இந்து மாணவர் மன்றப் பொறுப்பாசிரியர்கள்)

## அநாதரவான நிலையில் ஆண்குழந்தைகண்டுபிடிப்பு

(பண்டத்தரிப்பு)

உடுவில் ஆலடி என்னுமிடத்திலுள்ள மதகு ஒன்றினுள் நேற்றுக் காலை ஆண் குழந்தை ஒன்று அநாதரவான நிலையில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

வழிப்போக்கர் ஒருவரினால் கண்டெடுக்கப்பட்ட இந்தக் குழந்தை வைக்கோலினால் சுற்றப்பட்ட நிலையில் மதகுக்குக் கீழே கைவிடப்பட்ட நிலையில் இருக்கக் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இக்குழந்தையை கண்டு எடுத்தவர் அதனை மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைக்கு முதலில் கொண்டுவந்ததாகவும், பின்னர் யாழ். காவல்துறைக்கு முறைப்பாட்டுக்காக எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அறியப்படுகின்றது. (72)

## ஒய்வூதியர் அலுவல்களை யாழ். செயலகம் கவனிக்கும்

### - அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

புதிதாக அரசாங்க சேவையில் இருந்து ஒய்வு பெறுபவர்கள் ஒய்வூதிய அலுவல்களுக்காக இனிமேல் கொழும்புக்கு செல்லவேண்டிய அவசியமில்லை அவர்களது ஒய்வூதியம் சம்பந்தமான நடவடிக்கைகள் யாவும் இனிமேல் யாழ். செயலகத்தில் நடைபெறும்.''

யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் யாழ். செயலகத்தில் புதிதாக ஒய்வூதிய கணிப்பீட்டுக்கிளை ஒன்றை நேற்று சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: ஒய்வூதியர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும். முக்கியமாக விதவைகளுக்கு இது கூடிய நன்மை பயக்கக்கூடியது. (சு)

### யாழ். மத்திய

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் முதலானோரிடம் ஆரம்பக் கல்வி பயின்ற பின், சேனாதிராச முதலியாரிடம் இலக்கண, இலக்கியங்கள் பயின்று பன்னிரண்டாம் வயதிலேயே பண்டிதர்க்கான அறிவு பெற்றவர் வடமொழியையும் நன்கறிந்தவர்.

பின்னர் அரசாங்க மொழியான ஆங்கிலம் பயில்வதற்காக 1834ல் வேம்படி என வழங்கிய மத்திய கல்லூரிக்குச் சென்றார். அங்கே பீற்றர் பேர்சிவல் என்னும் பெரியார் அவ்வாண்டிலேயே அங்கே பொறுப்பேற்று, முதல் தரமான கல்விக்கூடமாக நடத்தி வந்தார். ஆறுமுகம் உச்ச விவேகியாய் ஏழாண்டு பயின்று அங்கேயே ஆசிரியராய் இருந்தபோதே ஆங்கிலேயரான வணக்கத்துக்குரிய போதகர் அதிபர் பேர்சிவலுக்குத் தமிழும், வடமொழியும் சொல்லிக் கொடுத்தார். அதிபரும், ஆறுமுகமும் ஆளுக்கு ஆள் குருவும், ஆளுக்கு ஆள் சீடருமாகக் கொண்டும் கொடுத்தும் இருந்தார்கள். ஆறுமுகத்திடம் நிறையப் படித்த அதிபர், ஆறுமுகத்தை 'மமகுரு' என்று அன்பொழுக அழைத்தார். தமது மத நூலாகிய பைபிளை ஆறுமுகத்தைக் கொண்டு நல்ல தமிழில் மொழி பெயர்ப்பித்தார்.

பைபிளை மொழி பெயர்த்தவருக்கு ஆங்கில வளம் சுரந்தது. கிறிஸ்தவ சமயமும் விளங்கியது. பாதிரிமார் செய்துவந்த வேலையும் வெளியாயிற்று. ஆசிரியர் வேலையை விட்டுச் சைவப் பிரசாரகரானார். பேர்சிவல் அவர்களும் அதிபர் பதவியையும், பாதிரியார் வேலையையும் உதறிவிட்டு, சென்னைக்குச் சென்று தமிழ், வடமொழிப் பேராசிரியரானார். இன்னும் தரமான 'தினவர்த்தமானி' செய்தித்தாளும் நடத்தினார். தமிழில் உள்ள ஆயிரக்கணக்கான பழமொழிகளைத் திரட்டினார்.

ஆறுமுகம் பைபிள் மொழி பெயர்த்த திறமையால் சென்னையில் நல்ல பெயர் பெற்றார். திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவம் பேசி, பட்டும் பட்டமும் பொன்னாடையும், உருத்திராக்க மாலையும் பெற்றார். அவர் பெற்ற பட்டம் நாவன்மைக்காக வழங்கினார்கள்.

ஆறுமுகநாவலரைப் போல நமக்கு ஆளில்லை என்று சைவத்தமிழுலகம் கொண்டாடியது. நாவலர் பேசினார், எழுதினார், சீர்திருத்தம் செய்தார், பன்முகப்பணிகள் செய்தார். நல்ல மாணாக்கர் பரம்பரையை ஊர்கள் தோறும் உருவாக்கினார். திருநீறு பூசப் பழக்கினார். சைவப் பாடசாலைகளை ஆரம்பித்தார். அச்சுக்கூடம் நடத்தினார். சிறுவர்க்கான நடை, பெரியவர்களுக்கான நடை, கண்டித்தற்கான தர்க்கரீதியான நடை, கடும் இலக்கண இலக்கியங்களுக்கு உரை நடை என்றெல்லாம் எழுதினார். தாமும் நல் நடை நடந்து எங்கள் முன்னோரையும் நல்நடை நடக்கச் செய்தார். நாமும் நடப்போம்.

## தபால்களை இன்று சேர்ப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

குமண கப்பல் இன்று சனிக்கிழமை அல்லது நாளை ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பு செல்ல இருப்பதால் இன்று காலை 7 மணிக்கு முன்பு தபால்களை, யாழ். தபால் நிலையத்தில் சேர்க்கும்படி யாழ் பிரதான தபால் நிலையம் அறிவித்துள்ளது. (வி)

### 5ம் ஆண்டு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வித்தியாலயத்தைச் சேர்ந்த கே. பிருந்தாபன் ஆவர் இவர் நக்காரேட்டைச் சேர்ந்தவராவர். இம்மாணவர் 199புள்ளிகளைப்பெற்றுள்ளார் எனபது குறிப்பிடத்தக்கது. 157, 159)

### வெடிகுண்டுகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன.

வெடிகுண்டுகளை துல்லியமாக மோப்பம் பிடிப்பதில் இந்த நாய்களுக்கு ஆஸ்திரேலியாவில் விஷேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாம். (சி)

### சைவத்திற்கும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மார்கள் இந்நாட்டு மக்களுக்குப் போதித்த மேல்நாட்டு நாகரீகத்தையும், மதத்தையும் அவர்கள் அவாவுடன் பின்பற்றித் தேசிய நாகரீகத்தையும், சைவத்தையும் புறக்கணித்துத் தாய்மொழியைக் கைவிட்டு அரசாங்க மொழியாகிய ஆங்கிலமே தஞ்சமெனக் கருதி நிலைகுலைந்திருந்த காலத்தில் ஈழத்தின் தவப்புதல்வனாய் தோன்றிய ஆறுமுகநாவலரின் அரிய சேவையினாலன்றோ தேசிய நாகரிகமும், மதமும், மொழியும் புத்துயிர் பெற்றுத் தழைத்தன. சைவத்திற்கும், தமிழுக்கும் தம் வாழ் நாள் முழுவதையுமே அப்பெரியார் அர்ப்பணம் செய்தார். பாதிரிமார் தமது சுவாசாரத்தையும், மதத்தையும் வளர்ப்பதற்கு எவ்வித முறைகளைக் கையாண்டார்களோ அதே முறைகளையே அவர்களை எதிர்ப்பதற்குத் தாமும் கையாண்டார். "பாதிரிமார் சைவத்தை நிந்தித்துப் பிரசுரித்த துண்டுப் பிரசுரங்களைக் கண்டித்து அவர் விடுத்த மறுப்புக் கண்டனங்கள் சைவாபிமானிகளுக்கு உற்சாகத்தையும், ஆவத்தையும் அளித்ததுமன்றி பாதிரிமாரை வெட்கமடையச் செய்தன. அவர் பொழிந்த பிரசங்கமாரிகள் போலிப் போதனைகளால் வரண்டிருந்த மக்களின் உள்ளங்களைக் குளிரச் செய்து அவர்களின் தாய் மொழிப் பற்றையும், புராதன மதப்பற்றையும் மறுமலர்ச்சி அடையச் செய்தன. சைவ சமயத்தையும் பற்றிய நூல்களைத் தாமே எழுதிப் பிரசுரித்ததோடு செய்யுள் நடையில் இருந்த அரிய இலக்கிய நூல்களையும், சமய நூல்களையும் எளிய வசன நடையில் எழுதி யாவரும் அந்நூல்களிலிருந்து பொக்கிஷங்களை அனுபவிக்குமாறு தமது அச்சகத்தில் அச்சிட்டுப் பிரசுரித்தார். அதுவுமன்றிச் சைவப்பிள்ளைகள் ஆங்கிலம் கற்பதற்கு ஓர் சைவாங்கில பாடசாலையை ஸ்தாபித்தார். அன்று அவர்கள் இட்ட வித்திலிருந்தே தற்போது யாழ். நகரிலே பிரபல கல்லூரியாய் விளங்கும் இந்துக் கல்லூரி உருவெடுத்தது. அவர் நிறுவிய சைவப் பிரகாச வித்தியாசாலை சென்ற நூறாண்டுகளுக்கு மேலாக சைவத்திற்கும், தமிழுக்கும் அரிய சேவை செய்து வருகிறது.

இத்தகைய அரும்பணியாற்றிய......... ஆண்டுகளின் பின் யாழ். 'மத்திய கல்லூரி அன்புக் காணிக்கையின் ஒருசிறு பகுதியாக 28-11-92 கொடித்தினமொன்றை ஆரம்பித்தது. 5-12-92 ஆகிய இன்று இவ்விதழையும் வெளியிடுகிறது. இந்நிகழ்வானது வருங்கால சந்ததியின் உள்ளத்தே நம்பிக்கையையும் பேருணர்வையும் ஊட்டுவதாகும். இன்னும்பல பணிகளை யாழ் மத்திய கல்லூரி இந்து மாமன்றம் பொதுமக்களின் தாராளமான ஒத்துழைப்புடன் அவற்றையெல்லாம் காலப்போக்கில் நிறைவேற்றும்.

நாவலர் வாழ்க
அவர் புகழ் ஓங்குக.

### வலிகாமம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பை மேற்கொள்ள விரும்புவோர் பூரண விலாசத்துடன் கடிதங்களை தபாற் பெட்டிகளில் சேர்க்கும்படி பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு ச. ம. சேதுகாவலர் அறிவித்துள்ளார்.

மேலும் இப்பகுதிகளுக்கான கடிதங்கள் அனைத்தும் சாதாரண கடிதங்களாகவும், மாதகல், இளவாலை, பன்னாலை, தெல்லிப்பழை, கொல்லங்கலட்டி என விலாசமிட்டிருத்தல்வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. (159)

### ஜே. ஆரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வீடும் வளவும் தற்போது ஜே ஆரின் மகன் ரவி ஜெயவர்த்தனாவின் பெயரில் உள்ளது.

இதேவேளை கலவத்த என்னுமிடத்தில் திரு. ஜெயவர்த்தனாவுக்குச் சொந்தமான தோட்டம் ஒன்றிலும் சி. ஐ. டி. பொலிசார் சோதனையிட்டுள்ளனராம். இந்த தோட்டத்தின் காவலாளியும் பலத்த விசாரணைக்குட்படுத்தப்பட்டாராம் இந்தக் காவலாளி லலித் காமினி கட்சியை சேர்ந்தவராம்.

தற்போது புலனாய்வுத் துறையினர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசியல் நடவடிக்கை குறித்தும் ஆராய்ந்து வருவதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (சி)

## விடைத்தாள்கள் வந்துசேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

க. பொ. த சாதாரணதரப் பரீட்சைக்கான ஒரு தொகுதி விடைத்தாள்களும் காகிதாதிகளும் நேற்றுமாலை இங்கு எடுத்துவரப்பட்டன.

முதல் ஐந்து நாட்களில் நடைபெற உள்ள தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், வரலாறும் சமூகக்கல்வியும் ஆகிய பாட விடைத்தாள்களை எடுத்துவரப்பட்டுள்ளன. (157, 159)

### 10 000 அடையாள

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் இன்னமும் அடையாள அட்டைகளை பெறவேண்டியுள்ளதால் மேற்படி பரீட்சார்த்திகள் தமது அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்வதற்கு இலகுவாக நாளை ஞாயிற்றுக்கிழமையும் சகல அஞ்சல் அலுவலகங்களும் காலை 8 மணி தொடக்கம் 12 மணிவரை விநியோக வேலைகளில் ஈடுபடும்.

அத்துடன் உப அஞ்சல் அலுவலகங்கள் மூலமாக அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்த மாணவர்கள் கட்டுப்பாட்டுக் காரியாலயத்தில் அவர்களது அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (159-157)

### வடபிராந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாளராக கடமையாற்றி வந்தவர்.

மேலும் கடந்தஆகஸ்டில் அராலியில் இடம்பெற்ற கண்ணி வெடிச்சம்பவத்தில் அப்போதைய வடபிராந்திய கடற்படைத் தளபதியான கொமடோர் மொஹான் ஜயமகா கொல்லப்பட்டதன் பின்னர் தற்காலிக தளபதியாக கடமையாற்றிவந்த கொமடோர் சிசில் தெஸேரா கடற்படையின் பிரதம அதியாக நியமனம் பெற்றுள்ளார்.

இவர் பலவருட காலமாக கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதியாகவும் கடமையாற்றியுள்ளார்.

### 14.ம் திகதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. றெனி டிமெல் எதிர்வரும் 14-ம் திகதி இலங்கை திரும்புவாரென தெரிவிக்கப்பட்டது.

### பிரபா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட கண்ணிவெடியை அங்கு புதைத்து வெடிக்கவைத்த விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு தலைவர் பிரபாகரன் பரிசுகொடுக்கும் படம் நேற்று ரூபவாஹினியில் காண்பிக்கப்பட்டது.

தென்பகுதிபத்திரிகைகளிலும் இந்தப்படம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இந்தப்படத்துடன் கூடிய பத்திரிகைகள் நேற்று ரூபவாஹினியில் தமிழ், சிங்கள, ஆங்கில செய்தி ஒலிபரப்பின்போது காண்பிக்கப்பட்டன. (வி)

### கொப்பேகடுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி

கள் பிரமுகர் திரு. லோறன்ஸ் திலகர் ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு தெரிவித்துள்ளார்.

அராலித்துறையில் கடந்த ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற கண்ணி வெடிச் சம்பவத்தில் லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட ஒன்பது படை அதிகாரிகள் கொல்லப்பட்டனர். ஒரு சிப்பாய் காயமடைந்தார்.

### றெனியின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. டி மெலுக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த வழக்கு ஒன்று நேற்றுகொழும்பு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அரசு தரப்பு சாட்சியங்கள் வலுவில்லாதிருந்த காரணத்தால் அந்த வழக்கில் திரு. றெனிக்கு சாதகமாகவே தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதனையடுத்து அவருக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த அனைத்து வழக்குகளும் வாபஸ் பெறப்பட்டதாக அரசு தெரிவித்தது.

மேலும் வடபிராந்திய கடற்படை தளபதியாக கடமையாற்றிவந்த கப்டன் டி. கே தஸநாயக்கா கொமடோராகபதவிஉயர்த்தப்பட்டு கிழக்குப்பிராந்திய கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். (க

## மரண அறிவித்தல்

### அழகம்மா செல்லையா

(மலாயன்பென்சனியர்) அமரர் செல்லையாவின் அருமை மனைவி அழகம்மா 04-12-1992 வெள்ளிக்கிழமை பிற்பகல் காலமானர். இவர் Dr. கனகசுந்தரம் (R. M. P. Colombo), ஞானசுந்தரம், இராசசிங்கம், விஜயலட்சுமி Canada, அரியரத்தினம் தருமசேனன், தனலட்சுமி, அமரர் சகாதேவன், இராசசேகரன், நரேந்திரன், குணசேகரன் (London, குணசேகரம் (Saudi), சிவசண்முகநாதன் பாக்கியலட்சுமி, குமரகுருபரன் (Water ResourcesBoard) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவானந்தன் (Canada, மிதிலாதேவி, நாகம்மா, தங்கரத்தினம், இரத்தினவடிவேல் (ஆசிரியர், விக்ரோறியாக்கல்லூரி) அன்னம்மா, கோகிலாதேவி, கிருஷ்ணவேணி (London), குலரஞ்சினி (Saudi), லீலாவதி, ஜெயராமச்சந்திரன் (Highways Dept, தருமராணி ஆகியோரின் அன்புமாமியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 05-12-92 இன்று சனிக்கிழமை நண்பகல் மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
நரேந்திரன் (மகன்)
(இந்திரி)

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய். (சி-1036)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் 05ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a New Paper at the General Post Office, Sri Lanka under Licence Number B/10336/8